**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

OS.No.677/2019 பெயர் : சக்திவேல் நாள் : 18.02.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1: பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

புருங்கான் என்ற ரெங்கசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவர் உயிருடன் இருந்தபோதே, 3 வாரிசுகளுக்கும் தனித்தனியாக அனுபவம் செய்யுமாறு சொல்லி, அதன் அடிப்படையில் 3 வாரிசுகளும், தனித்தனியாக சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள் என்றால், இல்லை, அனைவரும் ஒன்றாக விவசாயம் செய்து வந்தோம். 3 வாரிசுகளும் தனித்தனியாக ஆளுக்கு ஒரு பக்கம் விவசாயம் செய்தார்கள் என்றால், சரிதான். அதன் அடிப்படையில் தான் இன்றுவரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால், அனைவரும் ஒன்றாக தான் ஓட்டி வருகிறோம். பிரதிவாதிகள் புருங்கான் ஒதுக்கிய பாகத்தை தான் இன்று வரை ஓட்டி வருகிறார்கள் என்றால், சரிதான். புருங்கான் வாதிகளின் மூதாதையர்களுக்கு ஒதுக்கிய பாகத்தை, அவரின் வாரிசுகள் விற்பனை செய்துவிட்டார்கள் என்றால், இன்னும் விற்கவில்லை. சீரங்காயம்மாள் எனது பாட்டியின் தங்கை ஆவார். மருதம்மாள் பக்கத்து தோட்டத்துக்காரர் ஆவார். மாரிமுத்து எனது அப்பா. செம்பாயி அம்மாள் என் தாத்தா பெரியராமசாமியின் 2-வது மனைவி என்றால், சரிதான். செம்பாயி அம்மாள் மகன்தான் எனது தகப்பனார் மாரிமுத்து. என் தகப்பனாரின் தம்பி பெயர் ஈஸ்வரன். ஈஸ்வரனின் தம்பி சோமசுந்தரம் இறந்து விட்டார். சோமசுந்தரத்தின் மனைவி குப்பாயி இந்த வழக்கின் 16-ம் வாதி. ஈஸ்வரன் இந்த வழக்கின் 15-ம் வாதி. என் தாயார் 7-ம் வாதி. என் தந்தையின் வாரிசுகள் 8 முதல் 11

வாதிகள் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் 30.06.1977-ம் தேதியிட்ட கிரையப் பத்திரம் எனது பாட்டி செம்பாயி, என் தகப்பனார் மாரிமுத்து, சித்தப்பா ஈஸ்வரன், ஈஸ்வரன் தம்பி சோமசுந்தரம் என்கிற நாராயணன் ஆகியோர் சீரங்காயிக்கு கிரையம் கொடுத்த பத்திரம் என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். அந்த சொத்தில் வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பாகம் உண்டு. மேற்படி சொத்து புருங்கானுக்கு பாத்தியப்பட்டு, என் தாத்தாவுக்கு வந்த சொத்து ஆகும். என்னிடம் காட்டப்படும் 30.06.1977-ம் தேதியிட்ட கிரைய ஆவணம் வருதாம்மாளுக்கு பெரியராமசாமியின் மகன் மாரியப்பன் தனக்காகவும், மைனர் மகன்களுக்கு கார்டியனாக இருந்து எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.2** ஆகும். மேற்படி சொத்தை பெரியராமசாமி, சின்னராமசாமி, அம்மாசை ஆகியோர் பிரித்துக் கொண்டார்கள். மூவரும் பிரித்துக் கொண்டதற்கான பத்திரம் உள்ளதா என்றால், உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால், தாக்கல் செய்ய முடியும். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் புருங்கான் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால், சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் பிரதிவாதிகள் தரப்பினர் இல்லை என்றால், சரிதான், அப்போது அனைவரும் கையெழுத்து போடும் வழக்கம் இல்லை. பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை இந்த வழக்கில் காட்டவில்லை என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களை புருங்கான் அவர்களுக்கு ஒதுக்கிய சொத்துக்களை விற்பனை செய்தார்கள் என்றால், 3 பேரும் சேர்ந்து விற்று விட்டார்கள். அம்மாசை மனைவி லட்சுமி எனக்கு சின்ன பாட்டி. அவரது மகள் பெயர்

பாப்பாள். 13.12.2013-ல் மேற்படி லட்சுமி அவரது மகள் பாப்பாளுக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதிக் கொடுத்து விட்டார் என்றால், 3 பாகமாக பிரித்து அவரவர்கள் கிரையம் செய்துக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படுவது அந்த தானசெட்டில்மெண்ட் என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.3** ஆகும். அந்த ஆவணத்தில் கண்டுள்ள சொத்து ஊருக்குள் இருக்கும் வீடாகும். அதுவும் புருங்கானுக்குப் பாத்தியப்பட்டதாகும். என்னிடம் காட்டப்படுவது 09.10.2015-ல் ராமு மனைவி பாப்பாள், அம்மாசை மகன் செங்கோடனுக்கு எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் என்றால், சரிதான், அது புருங்கான் சொத்துதான், மாறி மாறி அவர்கள் கிரையம் செய்துக்கொண்டார்கள். அது **பி.வா.சா.ஆ.4** ஆகும். என்னிடம் காட்டப்படுவது 09.10.2015-ல் ராமு மனைவி பாப்பாள் அம்மாசை மகன் ஆறுமுகத்திற்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் என்றால், சரிதான், அது புருங்கான் சொத்துதான், மாறி மாறி அவர்கள் கிரையம் செய்துக்கொண்டார்கள். அது **பி.வா.சா.ஆ.5** ஆகும். என்னிடம் காட்டப்படுவது 09.10.2015-ல் அம்மாசை மகன் ரெங்கசாமிக்கு ராமு மனைவி பாப்பாள் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால், சரிதான், அது புருங்கான் சொத்துதான், மாறி மாறி அவர்கள் கிரையம் செய்துக்கொண்டார்கள். அது **பி.வா.சா.ஆ.6** ஆகும். ராமு மனைவி பாப்பாள் இந்த வழக்கில் 12-ம் பிரதிவாதி என்றால், சரிதான். புருங்கான் இளைய மகன் அம்மாசை மனைவி லட்சுமி என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் லட்சுமி 12-ம் பிரதிவாதி பாப்பாளுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் என்றால், சரிதான், அது புருங்கான் சொத்துதான், மாறி மாறி அவர்கள் கிரையம் செய்துக்கொண்டார்கள். அது **பி.வா.சா.ஆ.7** ஆகும். என்னிடம் காட்டப்படும்

01.11.2004-ல் சீரங்காயிம்மாளுக்கு ஆறுமுக கவுண்டர் மனைவி வருதம்மாள் விற்பனை செய்த கிரையப் பத்திரம் என்றால், சரிதான், அது புருங்கான் சொத்துதான், மாறி மாறி அவர்கள் கிரையம் செய்துக்கொண்டார்கள். அது **பி.வா.சா.ஆ.8** ஆகும். என்னிடம் காட்டப்படுவது 01.07.2004-ம் வருடம் சந்திரசேகர் அவர்களுக்கு ராமசாமி மனைவி முத்தாயம்மாள் மற்றும் வகையறா எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் என்றால், சரிதான், 3 பேர் அண்ணன், தம்பிகள் அவர்கள் பிரித்து சொத்தை விற்று விற்றார்கள். அது **பி.வா.சா.ஆ.9** ஆகும். என்னிடம் காட்டப்படும் புருங்கான் சொத்தில் ஒரு பகுதியை மாரிமுத்து மனைவி முத்தம்மாளுக்கு கருப்பண்ணன் மகன் மாரிமுத்து எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.10** ஆகும். என்னிடம் காட்டப்படும் என் பாட்டி செம்பாயியிடம் கிரையம் வாங்கிய சீரங்காயி அம்மாள் பால்ராஜ் என்பவருடன் கிரைய அக்ரிமெண்ட் எழுதிக் கொண்டார் என்றால், சரிதான், 3 பாகமாக பிரித்து விற்று விற்றார்கள். அது **பி.வா.சா.ஆ.11** ஆகும். வழக்கு சொத்து 3 பாகமாக பிரித்ததில், சின்னராமசாமி, அம்மாசைக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால், 3 பேருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்து. பெரியராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து விற்பனையாகிவிட்டதால், இந்த வழக்கில் காட்டவில்லை என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படுவது அம்மாசை மனைவி லட்சுமி அவர் குடியிருக்கும் வீட்டிற்கு கட்டி வரும் வீட்டுவரி ரசீதுகள் (3 எண்ணிக்கைகள்) என்றால், சரிதான், நானும் வீட்டுவரி ரசீது கட்டி வருகிறேன். அது **பி.வா.சா.ஆ.12** ஆகும். என்னிடம் காட்டப்படுவது அம்மாசை மனைவி லட்சுமி செலுத்தி வரும் மின்கட்டண ரசீதுகள் (2 எண்ணிக்கைகள்) என்றால், சரிதான், அவரவர்கள் வீட்டுவரி கட்டி வருகிறார்கள். அது **பி.வா.சா.ஆ.13** ஆகும். என்னிடம்

காட்டப்படுவது அம்மாசை மனைவி லட்சுமிக்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்காக அவர் செலுத்திய கந்தாய ரசீதுகள் (3 எண்ணிக்கைகள்) என்றால், சரிதான், ஆனால் அது 3 பேருக்கும் பொதுவானதாகும். அது **பி.வா.சா.ஆ.14** ஆகும். என்னிடம் காட்டப்படுவது ஊருக்குள் இருக்கும் வீட்டின் நத்தம் பட்டா, அ பதிவேடு (கணினி நகல்) ஆகும், அது அம்மாசை மனைவி லட்சுமி பெயரில் உள்ளது என்றால், சரிதான். அது **பி.வா.சா.ஆ.15** ஆகும். அம்மாசை மனைவி லட்சுமி இறந்து விட்டார் என்றால், சரிதான். லட்சுமியின் வாரிசுகள் தான் 6 முதல் 12 பிரதிவாதிகள் என்றால், சரிதான். பெரியராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் முழுவதும் விற்பனை செய்யப்பட்டு, 3-ம் நபர் வசம் உள்ளது என்றால், சரிதான், மூவருமே சொத்துக்களை விற்றுவிட்டார்கள்.

பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களில் சின்னராமசாமியின் வாரிசுகளோ, அம்மாசையின் வாரிசுகளோ தரப்பினர் இல்லை என்றால், பிரதிவாதிகளும் தரப்பினர் இல்லை, நாங்களும் தரப்பினர் இல்லை. பெரியராமசாமியின் வாரிசுகள் விற்பனை பத்திரத்தில் தரப்பினர் இல்லை என வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. ஊருக்குள் உள்ள புருங்கானுக்கு பாத்தியப்பட்ட பொது வீட்டின் விலாசத்தில் தான் பிரதிவாதிகளுக்கு ஆதார் அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். பெரியராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை விற்பனை செய்துவிட்டதால், தாவா சொத்துக்களில் எந்த பாகமும் வாதிகளுக்கு இல்லை என்று சொன்னால், சரியல்ல, 3 பேருக்கும் பாகம் பிரிய வேண்டும். வாதிகள் இன்றைய தேதி வரை தாவா சொத்திற்கு கந்தாய இரசீது செலுத்தவில்லை என்றால், சரிதான், பிரதிவாதிகள் பொதுவாக ஓட்டி வந்ததால், கந்தாய இரசீது நாங்கள் செலுத்தவில்லை. தாவா சொத்துக்கு வாதிகளாகிய

எங்கள் பெயரில் பட்டா இல்லை என்றால், யாருக்குமே பட்டா இல்லை. இந்த வழக்கில் புருங்கானுக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் காட்டாததால், இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. இந்த வழக்கில் மற்ற பாகஸ்தர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். தாவா சொத்து விபரம் 2013-ல் பிரதிவாதிகள் எழுதிக்கொண்ட பாகக்கறார் பத்திரத்தின் உள்ளவாறு காட்டியுள்ளேன் என்றால், சரிதான். 2013 பாகப்பறார் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் வாதிகளாகிய எங்களுக்கு எந்த பாகமும் இல்லை என்று சொன்னால், சரியல்ல. நாங்கள் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால், சரியல்ல. 2013 பாகக்கறார் பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களை பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான், அதில் எங்களுக்கும் பங்கு வேண்டும். எங்களுக்கு தாவா சொத்துக்களில் பாகம் இல்லை என்றாலும், தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னாலும், சரியல்ல.